நித்ரா 2025 காலண்டர்

Google Play

App Store

# நித்ரா காலண்டரின்

# ஜோதிட மலர்

ஆன்மிக தேடலின் புதுமை !!

மாசி 01 முதல் 30 வரை

## மாசி மாத ராசி பலன்கள்



## No.1 நித்ரா காலண்டர் வழங்கும்

## மகிமைகள் நிறந்த

# மாசி மாதம்...!!

NITHRA APPS

Nithra Apps India Private Limited

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | மகிமைகள் நிறைந்த மாசி மாதம் | 01 |
| 02. | மாசி மாத மகத்துவங்கள் | 06 |
| 03. | மாசி மாத சங்கடஹர சதுர்த்தி.. தீர்க்க சுமங்கலி வரம் பெற்றிட.. விநாயகர் வழிபாடு | 12 |
| 04. | மாசி மாத சஷ்டி விரதம்... விரதம் அனுஷ்டித்து முருகனின் அருளை பெறுங்கள் | 14 |
| 05. | மாசி தேய்பிறை அஷ்டமியில்.. கால பைரவரை வழிபட்டு.. வாழ்வில் முன்னேற்றம் பெறுவோம் | 16 |
| 06. | மாசி பிரதோஷம்.. வாழ்வில் கஷ்டங்கள் அனைத்தும் நீங்க.. இந்நாளை தவறவிடாதீர்கள் | 21 |
| 07. | மகாசிவராத்திரி... சிவனின் அருளை பெற்றுதரும்... நான்கு ஜாம பூஜைகள் | 22 |
| 08. | மாசி மகாசிவராத்திரி என்ன செய்யலாம்? செய்யக்கூடாது? | 26 |
| 09. | மாசி அமாவாசை... காலை முன்னோர் வழிபாடு... மாலை குலதெய்வ வழிபாடு.. மிகச்சிறப்பு | 28 |
| 10. | மாசி அமாவாசை சிறப்பு | 31 |
| 11. | மாசி மகத்தின் சிறப்புகள் – ஓர் பார்வை | 31 |
| 12. | மாசி மக நட்சத்திரத்தில் எந்த தெய்வத்தை வழிபடலாம்? | 33 |
| 13. | மாசி பௌர்ணமி | 35 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 14. | மகத்தான வாழ்வை தரும் மாசிமகம்... விரதம் இருப்பது எப்படி? | 36 |
| 15. | காரடையான் நோன்பு... விரதம் இருப்பது எப்படி? | 37 |
| 16. | மாசி மாதத்தில் பிறந்தவர் குணாதிசயங்கள் | 39 |
| 17. | மாசி மாத சுப தினங்கள் | 42 |
| 18. | சந்திராஷ்டம தினங்கள் | 44 |
| 19. | மாசி மாத விரத தினங்கள் | 46 |
| 20. | மாசி மாத ராசிபலன்கள் | 48 |



# மகிமைகள் நிறைந்த மாசி மாதம்

மாசி என்பது மகத்தான மாதம். வேதம் கற்றுக் கொள்ளுதல், கலைகளைக் கற்றறிதல், உபநயனம் முதலான விஷயங்களுக்கான அற்புதமான மாதம் மாசி மாதம். இந்த மாசி மாதத்தில் நாம் எது செய்தாலும் இரட்டிப்புப் பலன்கள் உண்டு என்பது உறுதி.

## மாசி மாதத்தின் சிறப்புகள்

முல்லை நிலத்தின் முதல் தெய்வமாக மகாவிஷ்ணு அவதாரம் எடுத்தது மாசி மகத்திருநாளில் தான். மாசி மாத சங்கடஹர சதுர்த்தி நாளில் விரதம் இருப்பவர்கள் எல்லாவித தோஷங்களிலிருந்தும் விடுபடுவர்.

காளிந்தி நதியில் பார்வதிதேவி, ஒரு தாமரை மலரில் வலம்புரிச் சங்காகத் தோன்றியது மாசி மாதத்தில் தான். சிவ பெருமானின் திருவிளையாடலுக்கு அதிகளவு அந்தஸ்து பெற்றதும் மாசி மாதத்தில் தான்.

மந்திர உபதேசம் பெறுவதற்கு மாசி மாதம் மிகவும் உகந்ததாக கருதப்படுகிறது. மாசி மாதம் புனர்பூச நட்சத்திர நன்னாளில் குலசேகர ஆழ்வார் அவதரித்தார்.

அன்னதானத்தின் பெருமைகளை உணர்த்துவது மாசி மகம் தான். முருகப்பெருமான் தன் தந்தை சிவபெருமானுக்கு சுவாமி மலையில் உபதேசம் செய்தது மாசி மாத பூச நட்சத்திர தினத்தில் தான்.

பெரும் பாவங்களான பிரம்மஹத்தியைப் போக்கி நற்கதி கொடுக்கும் இரு ஏகாதசிகள் வருவது மாசி மாதத்தில் தான்.

ஒருவர் மேற்படிப்பு, ஆராய்ச்சி போன்ற நல்ல செயல்களை மாசிமக நாளில் துவங்கினால் சிறந்து விளங்கலாம்.

தன் விருப்பங்கள் நிறைவேற அகத்தியர் தவம் இருந்து அருள் பெற்றதும் மாசிமாதத்தில் தான். மாசி மாதத்தில் வரும் காரடையான் நோன்பும், சாவித்ரி விரதமும் விஷேசமான விரதங்கள் ஆகும். மேலும் மாசி மகத்தன்றுதான் காமதகன விழா நடைபெறுகிறது.

மாசி மாதத்தில் குடிபெயரும் எந்த வீடாக இருந்தாலும் நீண்ட நாள் வாழ்வார்கள், மேலும் இம்மாதத்தை மாங்கல்ய மாதம் என்றும் கூறுவர். இம்மாதத்தில் பெண்கள் புது மாங்கல்யச் சரடு கட்டிக் கொள்வது சிறப்பானது.

மாசிமகம் ஸ்நானம் செய்வோருக்கு சிவனும், விஷ்ணுவும் உரிய பலன் தருவார்கள். மாசிமக புனித நீராடல் செய்ய இயலாதோர் மாசிமக புராணம் படிக்கலாம் அல்லது கேட்கலாம், அதுவும் புண்ணியமே. மாசிமகத்தன்று பூமியில் காந்த சக்தி உண்டாவதால், நீர் நிலைகளில் புதிய ஊற்றுகள் உண்டாகி அதில் காந்த சக்தி கரையும்.

மாசி மாதத்தில் அதிகாலை எழுந்து குளித்தபின் துளசியால் மகாவிஷ்ணுவை வழிபட்டால், வைகுண்டத்தில் இடம் கிடைக்கும். மாசிமக நாளில் அம்பிகையை குங்குமத்தால் அர்ச்சித்து வழிபடுபவர்களுக்கு இன்பமும், வெற்றியும் தேடி வரும். கல்வியில் சிறந்து விளங்க, மாசி

மாதத்தின் சுக்ல பஞ்சமியில் ஸ்ரீசரஸ்வதி தேவியை மணமுள்ள மலர்களால் அலங்கரித்து வழிபட வேண்டும்.

மாசி மகத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவாகும். அந்நாளில் இறைவனின் திருவுருவங்களை கடல், ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளுக்கு எடுத்துச் சென்று எழுந்தருளச் செய்து திருமுழுக்காட்டுவது தொன்று தொட்டு இருந்து வரும் வழிபாட்டு முறையாகும்.





**மாசி மகத்தன்று தெப்பத் திருவிழா நடைபெறும் இடங்கள் :**

நெல்லையப்பர் கோவில், ராமநாதபுரம் எமனேஸ்வர சிவாலய சிவன், திருச்செங்கோடு சின்ன ஓங்காளியம்மன் ஆலயத்தில் மாசி மாதம் 16 நாட்கள் குண்டவிழா நடைபெறுகிறது.

கும்பகோணம் மகாமக குளத்தில் நீராடுவதற்கு அமாவாசை, பவுர்ணமி, மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம், சிவராத்திரி, மாசிமகம், மகாமகம் ஆகிய நாட்கள் சிறப்பானதாகும்.

மாசி மாதம் புண்ணியம் நிறைந்த மாதமாகப் போற்றப்படுகிறது. இந்த மாசி மாதத்தில்தான் மகம் நட்சத்திரம் சேர்ந்து வருகிற மாசி மகத் திருவிழாவும், மகா சிவராத்திரி வைபவமும் நிகழ்கிறது.

இத்தகைய புண்ணியம் நிறைந்த நாளில், அம்மன் கோவில் எங்கெல்லாம்

# மாசி மாத சுப தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

## திருமணம் செய்ய உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## சீமந்தம் செய்ய உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## சீமந்தம் செய்ய உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## காது குத்து வைக்க உகந்த தினம்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 19 03.03.2025 திங்கள்
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## சுதர்சன ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்

மாசி 07 19.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 30 14.03.2025 வெள்ளி

## வாசற்கால் வைக்க உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## மாங்கல்யம் செய்ய உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## புதிய வண்டி வாங்க உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

## கல்வி ஆரம்பம் செய்ய உகந்த நாள்

மாசி 04 16.02.2025 ஞாயிறு
மாசி 07 19.02.2025 புதன்
மாசி 11 23.02.2025 ஞாயிறு
மாசி 14 26.02.2025 புதன்
மாசி 18 02.03.2025 ஞாயிறு
மாசி 25 09.03.2025 ஞாயிறு
மாசி 26 10.03.2025 திங்கள்
மாசி 28 12.03.2025 புதன்

# சந்திராஷ்டம தினங்கள்

சந்திராஷ்டமம் என்பது அவரவர்களின் ஜென்ம ராசிக்கு மனோகாரகனான சந்திரன் அஷ்டம ஸ்தானம் எனப்படும் எட்டாம் இடத்தில் மறைவதாகும்.

சந்திராஷ்டம தினத்தில் மனதில் இனம்புரியாத கவலைகள் மற்றும் மற்றவர்கள் மீது வெறுப்புணர்ச்சியும், கோபமும் ஏற்படும். சந்திராஷ்டம தினங்களில் வியாபாரம் மற்றும் உத்தியோக நிமிர்த்தமாக புதிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பின்வரும் தினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராசிக்காரர்கள் அன்றைய தினத்தில் பொறுமையுடனும், நிதானமாகவும் செயல்படுவதன் மூலம் தேவையற்ற விவாதங்களையும், மன வருத்தங்களையும் குறைத்து கொள்ள இயலும். வாருங்கள் உங்களின் ராசிக்கான சந்திராஷ்டம தினங்களை காண்போம். சந்திராஷ்டம தினங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

| தமிழ் மாதம் | ஆங்கில மாதம் | சந்திராஷ்டம ராசிகள் |
|---|---|---|
| மாசி 01 | 13.02.2025 | இன்று முழுவதும் மகரம் |
| மாசி 02 | 14.02.2025 | இன்று முழுவதும் மகரம் |
| மாசி 03 | 15.02.2025 | இன்று அதிகாலை 05.44 வரை மகரம் பின்பு கும்பம் |
| மாசி 04 | 16.02.2025 | இன்று முழுவதும் கும்பம் |
| மாசி 05 | 17.02.2025 | இன்று மாலை 06.02 வரை கும்பம் பின்பு மீனம் |
| மாசி 06 | 18.02.2025 | இன்று முழுவதும் மீனம் |
| மாசி 07 | 19.02.2025 | இன்று முழுவதும் மீனம் |
| மாசி 08 | 20.02.2025 | இன்று காலை 06.49 வரை மீனம் பின்பு மேஷம் |
| மாசி 09 | 21.02.2025 | இன்று முழுவதும் மேஷம் |
| மாசி 10 | 22.02.2025 | இன்று மாலை 05.40 வரை மேஷம் பின்பு ரிஷபம் |
| மாசி 11 | 23.02.2025 | இன்று முழுவதும் ரிஷபம் |
| மாசி 12 | 24.02.2025 | இன்று முழுவதும் ரிஷபம் |
| மாசி 13 | 25.02.2025 | இன்று அதிகாலை 12.56 வரை ரிஷபம் பின்பு மிதுனம் |
| மாசி 14 | 26.02.2025 | இன்று முழுவதும் மிதுனம் |
| மாசி 15 | 27.02.2025 | இன்று அதிகாலை 04.37 வரை மிதுனம் பின்பு கடகம் |
| மாசி 16 | 28.02.2025 | இன்று முழுவதும் கடகம் |
| மாசி 17 | 01.03.2025 | இன்று அதிகாலை 05.58 வரை கடகம் பின்பு சிம்மம் |
| மாசி 18 | 02.03.2025 | இன்று முழுவதும் சிம்மம் |
| மாசி 19 | 03.03.2025 | இன்று காலை 06.39 வரை சிம்மம் பின்பு கன்னி |
| மாசி 20 | 04.03.2025 | இன்று முழுவதும் கன்னி |
| மாசி 21 | 05.03.2025 | இன்று காலை 08.13 வரை கன்னி பின்பு துலாம் |


# மாசி மாத விரத தினங்கள்

| விரதத்தின் பெயர் | தமிழ் மாதம் | கிழமை / தேதி | வழிபாடு மற்றும் பலன்கள் |
|---|---|---|---|
| சங்கடஹார சதுர்த்தி | மாசி 04 | 16.02.2025 ஞாயிறு | விரதமிருந்து சந்திரனை தரிசனம் செய்த பின்பு விநாயகரை வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர கவலைகள் குறையும். |
| தேய்பிறை சஷ்டி விரதம் | மாசி 06 | 18.02.2025 செவ்வாய் | விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும். |
| தேய்பிறை அஷ்டமி | மாசி 08 | 20.02.2025 வியாழன் | மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும். |
| ஏகாதசி | மாசி 12 | 24.02.2025 திங்கள் | உபவாசம் இருந்து பெருமாளை வழிபட வாழ்க்கையில் இருந்து வந்த இன்னல்கள் நீங்கி சுபிட்சம் உண்டாகும். |
| திருவோண விரதம் | மாசி 13 | 25.02.2025 செவ்வாய் | உபவாசம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபாடு செய்து வர பாபங்கள் விலகி உயர்வு உண்டாகும். |
| வளர்பிறை பிரதோஷம் | மாசி 13 | 25.02.2025 செவ்வாய் | சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும். |
| மகா சிவராத்திரி | மாசி 14 | 26.02.2025 புதன் | சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும். |
| அமாவாசை | மாசி 15 | 27.02.2025 வியாழன் | பித்ருக்களுக்கு தர்ப்பணம் அல்லது பித்ருக்களுக்கு படையல் செய்து பசுமாட்டிற்கு அகத்திக்கீரை கொடுத்த பின்பு போஜனம் செய்து வர பிதுருக்களின் ஆசிகள் பரிபூரணமாக கிடைப்பதுடன் முன்னேற்றமான வாழ்க்கை தரமும் உண்டாகும். |
| சந்திர தரிசனம் | மாசி 17 | 01.03.2025 சனி | சந்திரனை வழிபட முன்னேற்றம் உண்டாகும். |
| சதுர்த்தி | மாசி 19 | 03.03.2025 திங்கள் | விரதமிருந்து சந்திரனை தரிசனம் செய்த பின்பு விநாயகரை வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர கவலைகள் குறையும். |
| சஷ்டி விரதம் | மாசி 21 | 05.03.2025 புதன் | விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும். |
| கிருத்திகை விரதம் | மாசி 21 | 05.03.2025 புதன் | முருக பெருமானையும் மஹாலட்சுமியையும் வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர மழலை செல்வமும் ஐஸ்வர்யத்தையும் பெறமுடியும் |
| அஷ்டமி | மாசி 22 | 06.032025 வியாழன் | மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும். |

# தை மாத ராசிபலன்கள்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 11ல் இருப்பதால் சிந்தனைகளில் இருந்துவந்தகுழப்பங்கள் விலகும். நுட்பமான சில விஷயங்களில் புரிதல் உண்டாகும். எதிலும் சோர்வின்றி சுறுசுறுப்புடன் செயல்படவும்.

செவ்வாய் 03ல் இருப்பதால் முயற்சிக்கு உண்டான பலன்கள் மற்றும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கும்.

புதன் 11ல் இருப்பதால் மாற்றமான சிந்தனைகள் மூலம் புதுவிதமான அனுபவங்களும் சூழ்நிலைகளும் உருவாகும். பணிகளில் நிதானத்துடன் செயல்படவும்.

மாசி 14 முதல் புதன் 12ல் இருப்பதால் உடனிருப்பவர்கள் பற்றிய புரிதல் உருவாகும். எதிர்பாராத சில பயணம் மூலம் சோர்வுகள் தோன்றி மறையும்.

சுக்கிரன் 12ல் இருப்பதால் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பாராத இடமாற்றங்கள் ஏற்படும்.

குரு 2ல் இருப்பதால் எதிலும் புத்துணர்ச்சியுடன் செயல்படுவீர்கள்.

சனி 11ல் இருப்பதால் வியாபார பணிகளில் லாபம் மேம்படும்.

ராகு 12ல் இருப்பதால் கடந்த கால நினைவுகள் அவ்வப்போது ஏற்பட்டு நீங்கும். பழைய சிக்கல்கள் குறையும்.

கேது 06ல் இருப்பதால் வழக்கு சார்ந்த விஷயங்களில் சாதகமான முடிவுகள் ஏற்படும்.

**வழிபாடு**: ராகவேந்திரரை வழிபாடு செய்துவர மனதளவில் தெளிவுகள் பிறக்கும்.



# பக்குவம் நிறைந்த ரிஷப ராசி அன்பர்களே. . !!



சூரியன் 10ல் இருப்பதால் எதிலும் பொறுமையுடன் செயல்படுவது மேன்மையை ஏற்படுத்தும். புதிய வாகனங்களை வாங்கி மகிழ்வீர்கள். மனதிற்கு பிடித்த விதத்தில் வீடுகளை மாற்றி அமைப்பீர்கள்.

செவ்வாய் 02ல் இருப்பதால் வெளி உணவுகளை தவிர்ப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது. புதிய நபர்களிடம் பொறுமை வேண்டும்.

புதன் 10ல் இருப்பதால் அரசு சார்ந்த பணிகளில் இருந்துவந்த இழுபறிகள் குறையும்.

மாசி 14 முதல் புதன் 11ல் இருப்பதால் மனதிற்கு மகிழ்ச்சி தரும் வகையிலான செய்திகள் கிடைக்கும். சமூகம் தொடர்பான பணிகளில் இருப்பவர்களுக்கு மேன்மை உண்டாகும்.

சுக்கிரன் 11ல் இருப்பதால் கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். சுபகாரியம் தொடர்பான விரயங்கள் உண்டாகும். சேமிப்பு குறித்த சிந்தனைகள் மேம்படும்.

குரு ராசியில் இருப்பதால் தொழில் நிமித்தமான சிந்தனைகள் மேம்படும்.

சனி 10ல் இருப்பதால் பெரியோர்களின் ஆலோசனைகள் மனதிற்கு தெளிவினை ஏற்படுத்தும்.

ராகு 11ல் இருப்பதால் நினைத்த காரியம் நிறைவேறுவதில் காலதாமதமும் அனுபவமும் ஏற்படும்.

கேது 05ல் இருப்பதால் உத்தியோக தொடர்பான பணிகளில் பொறுப்புக்கள் குறையும்.

**வழிபாடு**: லட்சுமி நரசிம்மரை வழிபட துன்பங்கள் விலகி நன்மைகள் அதிகரிக்கும்.